தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பொதுக் கணக்குக் குழு

(2001–2002)

(பன்னிரெண்டாவது பேரவை)

இரண்டாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள்)

12 SEP 2001

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை - 600 009

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பொதுக் கணக்குக் குழு

(2001–2002)

(பன்னிரெண்டாவது பேரவை)

இரண்டாவது அறிக்கை

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின்
1995–96 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (சிவில்)
உள்ள போக்குவரத்துத் துறை குறித்த பத்திகள் மீதான
பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை.

53-211-1

பொருளடக்கம்

பத்தி எண்	பொருள்	பக்கங்கள்
(1)	(2)	(3)
	2001-2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் அமைப்பு ..	iii-iv
	முன்னுரை ..	v
	அறிக்கை	
	இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1995-96 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (சிவில்) உள்ள போக்குவரத்துத் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை.	
	போக்குவரத்துத் துறை	
1.	பற்றாக்குறையான / மிகையான இறுதித் திருத்த மானியம்	1-2
2.	பேருந்துப் பணிகள்	2-4
3.	பொது ..	4
	இணைப்பு	
	பரிந்துரைகளின் சுருக்கம் ..	5-6

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2001-2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் அமைப்பு

(01–06–2001 ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது.)

தலைவர்

1. திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்

உறுப்பினர்கள்


2. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்,
நிதி மற்றும் சட்டத்துறை அமைச்சர், (அலுவல் காரணமாக)
3. திரு. எம்.சி. சம்பத்,
தலைவர், மதிப்பீட்டுக் குழு (அலுவல் காரணமாக)
4. திருமதி ப.விஜயலட்சுமி பழனிச்சாமி,
தலைவர், பொது நிறுவனங்கள் குழு (அலுவல் காரணமாக)
5. திரு. ப. இராஜரெத்தினம்
6. திரு. ப. இளவழகன்
*7. திரு. கே.கே. உமாதேவன்
8. திரு. வெ. ஏழுமலை
9. திரு. கே.சி. கருணாகரன்
10. திருமதி பூ. காசாம்பு
11. திரு. செ. சிவசாமி
12. திரு. இரா. திருமாவளவன்
13. திரு. ப. நீலகண்டன்
14. திரு. ஜி. பழனிசாமி
15. திரு. ஜி.கே. மணி
16. திரு. அ. மில்லர்
17. டாக்டர் சி. விஜயபாஸ்கர்
18. திரு. எஸ்.கே. வேதரெத்தினம்
19. திரு. செ.ம. வேலுசாமி

---

*16-8-2001 முதல்

செயலகம்

திரு. செ.சு. ஜானகிராமன்	..	முதன்மைச் செயலாளர்
திரு. வெ. இராசாராமன்	..	செயலாளர்
திருமதி வீ.நா. உமா	..	குழு அலுவலர்
திரு. சு. பாலச்சந்தர்	..	குழு அலுவலர்
திரு. ச. பாலகிருஷ்ணன்	..	சார்புச் செயலாளர்



முன்னுரை

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1995-96 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (சிவில்) உள்ள போக்குவரத்துத் துறை தொடர்பான பத்திகள் குறித்து 2001-2002 ஆம் ஆண்டிற்கான குழுவின் இரண்டாவது அறிக்கையை குழு அதிகாரமளித்துள்ளவாறு பொதுக் கணக்குக் குழுவின் தலைவராகிய நான், குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

2. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1995-96 ஆம் ஆண்டிற்கான (சிவில்) அறிக்கை 4-4-1997 ஆம் நாள், பேரவைமுன் வைக்கப்பெற்றது.

3. மேற்கண்ட பத்தி 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள துறை தொடர்பான முக்கியக் கருத்துக்களை 29-11-1999 மற்றும் 16-12-1999 ஆகிய நாட்களில் நடைபெற்ற கூட்டங்களில் குழு பரிசீலனை செய்தது.

4. குழுவின் பணிகளில் பெரிதும் உதவிய தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலாளர், மாநிலக் கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை)-I, நிதித் துறை துணைச் செயலாளர் ஆகியோருக்கு இக்குழு பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, இப்பணியில் ஒத்துழைப்பு நல்கிய போக்குவரத்துத் துறைச் செயலாளருக்கு குழு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

5. துறை அளித்துள்ள மூலக் குறிப்புகள் மற்றும் சாட்சியத்தின்போது அளித்த விவரங்கள், விளக்கங்கள் ஆகியவற்றை இவ்வறிக்கையினை இறுதி செய்யும் போது குழு கருத்தில் கொண்டது.

6. 2001ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 8ஆம் நாளன்று நடைபெற்ற தனது கூட்டத்தில் குழு இவ்வறிக்கைக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

சென்னை-600 009,
8 ஆகஸ்டு, 2001,
ஆடி, 24, விசு,
திருவள்ளுவராண்டு-2032.

எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்,
தலைவர்,
பொதுக் கணக்குக் குழு.

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1995-96 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (சிவில்) உள்ள போக்குவரத்துத் துறை தொடர்பான பத்திகள் குறித்த பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை.

போக்குவரத்துத் துறை

1. பற்றாக்குறையான/மிகையான இறுதித் திருத்த மானியம் [பத்தி 2.2.8. (b)]

1.1 மானியம் எண் *39* என்பதன்கீழ், அனுமதிக்கப்பட்ட மானியத்தில், இறுதியில் ஏற்பட்ட மீதத் தொகை ரூ. *51.52* இலட்சம் என்று கணக்கிடப்பட்டபோதிலும், *1996* ஆம் ஆண்டு மார்ச்சில் ரூ. *1873* இலட்சம் மட்டுமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது என்று குழு அறிகிறது. *1995-96* ஆம் ஆண்டில் ரூ. *32.79* இலட்சம் செலவிடப்படவில்லை எனபதையே இது காட்டுகிறது.

இதே போன்று, மானியம் எண் *57*-ன்கீழ், இறுதியில் ரூ *21.25* இலட்சம் மீதமேற்பட்டிருக்க, *1996* ஆம் ஆண்டு மார்ச்சில் ரூ. *5.30* இலட்சம் மட்டுமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது; *1995-96* ஆம் ஆண்டில் ரூ. *15.95* இலட்சம் செலவிடப்படவில்லை என்பதையே இது காட்டுகிறது.

1.2. மானியம் எண் *39* என்பதில், "*2070*-ஏனைய நிருவாகப் பணிகள்" என்கிற தலைப்பு உட்பட *5* பெருந்தலைப்புகள் அடங்கியுள்ளன என்றும், இத்துறையின் நிதி பற்று-வரவுகள், "*2070*-ஏனைய நிருவாகப் பணிகள்" என்கிற கணக்குப் பெருந்தலைப்பின்கீழ் வருகின்றன என்றும் துறை அதன் விளக்கக் குறிப்புகளில் தெரிவித்தது. "*2070*" என்கிற கணக்குத் தலைப்பின்கீழ், ரூ. *33.50* இலட்சம் மீதமேற்பட்டதாகத் துறை தெரிவித்தது. டயர்கள், டியூபுகள், பாட்டரிகள் ஆகியவற்றை வாங்குவதற்காக *1996* மார்ச் இறுதியில் வழங்கப்பட்ட ஆணைகள் நிதியாண்டின் இறுதிக்குள் செயல்படுத்தப்படவில்லை. எனவே இந்த கணக்குத் தலைப்பின்கீழ் மீதம் ஏற்பட்டது.

1.3. வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் போதிய நிதி ஒதுக்கப்பட்டிருக்கும்போது, துறை முன்னரே நன்கு திட்டமிட்டு, ஆணைகளை முன்னரே வழங்கியிருக்க வேண்டும் என்பதை குழு வருத்தத்துடன் குறிப்பிடுகிறது. வருங்காலத்தில் அத்தகைய குறைகளைக் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டுமென குழு விரும்புகிறது.

1.4. மானியக் கோரிக்கை 57-ன்கீழ் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களைப் பொறுத்தவரையில், "4070" என்ற பெரும் கணக்குத் தலைப்பின்கீழ் திட்டம் சாராப் பணிகளின்கீழ் ரூ. 1000/-ம், திட்டம் சார்ந்த பணிகளின்கீழ் ரூ. 6,000/-ம் மீதம் ஏற்பட்டது என்று மட்டுமே துறை தெரிவித்தது.

1.5. "4070" "திட்டத்தில் சேராதவை"-என்பதன்கீழ் "ரூ. 3.75 இலட்சமும் "4070" திட்டம்" என்பதன்கீழ் ரூ. 3.17 இலட்சமும் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளதாக கணக்கில் காட்டப்பட்டுள்ளதை குழு அறிகிறது. துறை, குழுவிற்குப் பதிலளிப்பதற்கு முன்னர் கணக்குகளைச் சரிபார்க்கவில்லை என்பதையே இது காட்டுகிறது. இது குறித்து குழு, பல உத்திரவுகளைப் பிறப்பித்தும், திரும்பத்திரும்ப பரிந்துரைகளை அளித்திருந்தபோதிலும், கட்டுப்பாட்டு அதிகாரிகள், கணக்கிணக்கப் பணி குறித்து போதிய கவனம் செலுத்தாதது குறித்து குழு தனது அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்கிறது. மானியக் கோரிக்கை 57-ன் கீழ் இறுதித் திருத்த மானியத்தை விடவும் மிகைமீதம் ரூ. 1595 இலட்சம் ஏற்பட்டதற்கு இம்மானியத்தின்கீழ் எனைய பெருந்தலைப்புகளில் கணக்கு வைத்துவரும் பிற துறைகளிடமிருந்து பெறப்பட்டவாறான, திட்டவட்டமான காரணங்களைத் துறை அளிக்க வேண்டும் என்று குழு விரும்புகிறது.

2. பேருந்துப் பணிகள்

(பத்தி 3.14.18.)

2.1. (i) தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வருகின்ற இத்திட்டக்கூறு, திட்டக் கால அளவில், 1909 பேருந்து அடிச்சட்டங்களைக் கொள்முதல் செய்தல், 1822 அடிச்சட்டத்தில் மேற்கூடு கட்டுதல், 7 பணிமனைகளை அமைத்தல், 10 பேருந்து நிலையங்கள் கட்டுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள வகை செய்தது என்று குழு அறிகிறது. எனினும், 1996 மார்ச் இறுதிவரையிலான திட்டச் சாதனை, ரூ.92.39 கோடி செலவில், முறையே 1595, 1591 மற்றும் 4 ஆக இருந்தது. பணிமனைகள் கட்டி முடிக்கப் படாததால், பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு இயக்கச் செலவைக் குறைப்பதன் மூலம், எரிபொருள் சேமிப்பு வகையில் எதிர்பார்த்தபடி ரூ. 2.24 கோடி, மீதமேற்படாமல் போயிற்று.

(ii) திட்ட ஒப்பந்தத்தின்படி, தமிழ்நாடு அரசு, அதன் நிதி ஒதுக்கீடு மூலமாக, பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். மாறாக, பேருந்து அடிச்சட்டம் வாங்க, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி கழகத்திடமிருந்து கடன் வாங்கிக் கொள்ளுமாறு பல்லவன் போக்குவரத்துக் கழகம் பணிக்கப்பட்டது. 1993 ஆம் ஆண்டு சனவரியில்தான், தமிழ்நாடு அரசு செலுத்தப்படாமலிருந்த

கடன் தொகை ரூ. 20.20 கோடியை (ரூ. 21 கோடியில்) பொறுப்பில் எடுத்துக் கொண்டு, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகத்திற்கு 1993 மார்ச்சில் தொகை செலுத்தியது. 1988-92 ஆம் ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகையாக, ரூ. 20.30 கோடி ஐ.டி.எ. (IDA) உதவித் தொகை பெறப்பட்டபோதிலும், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகத்திற்குச் செலுத்தப்படவேண்டிய கடன் தொகை செலுத்தப்படவில்லை. கோரப்பட்ட நிதியை தமிழ்நாடு அரசு ஒதுக்கத் தவறியதால், வேறுபாட்டு வீதத்திலான வட்டித் தொகை (தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகம், தமிழ்நாடு அரசின் வட்டி வீதமான 10.5 சதவீதத்திற்குப் பதிலாக, சாட்டிய வட்டி வீதமான 16 முதல் 16.5 சதவீதம் என்ற வீதம்) மற்றும் வட்டிக்கான வரித் தொகை வகையில் ரூ. 2.57 கோடி கூடுதலாகச் செலவிடப்பட்டுள்ளது என்று தணிக்கைச் சரிபார்ப்பில் தெரியவந்தது. இந்த வகையில் மேற்கொண்டும் ரூ. 97.23 இலட்சத்திற்கான கோரிக்கையும் 1995 மார்ச் மாதம் அன்று உள்ளவாறு நிலுவையாக இருந்தது.

2.2. 4 பணிமனைகளின் பணிகள் 1995 ஏப்ரல் முதல் 1996 மே மாதம் வரையுள்ள காலத்தில் முடிக்கப்பட்டிருந்தபோதிலும், அவை, போதியத் தேவைகளுடன் முன்னதாகவே செயல்படத் தொடங்கிவிட்டன என்றும், அதனால் துறை பெரும் பயனைப் பெற்று வந்தது என்றும் துறை தனது விளக்கக் குறிப்பில் தெரிவித்தது.

2.3. திட்ட ஒப்பந்தப்படி, தொழில் மேம்பாட்டு நிதியுதவி நிறுவனத்திடமிருந்து நிதியுதவியைப் பெற்று, பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு வழங்க வேண்டியிருந்தது என்று இது குறித்து நேரடியாக விளக்கம் அளிக்கையில் நிருவாக இயக்குநர் தெரிவித்தார். தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதியுதவி நிறுவனத்திடமிருந்து கடனுதவியைப் பெறுமாறு பல்லவன் போக்குவரத்துக் கழகம் பணிக்கப்பட்டது. ஆகவே, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதியுதவி நிறுவனத்திடமிருந்து கடனுதவியைப் பெற்று, திட்டம் தொடங்கப்பட்டது. திட்டச் செலவில் 20 சதவீதத்தை அரசு வழங்க வேண்டியுள்ளதாகவும், 80 சதவீதத்தை தொழில் மேம்பாட்டுக் கடனுதவி நிறுவனத்திடமிருந்து கடனாகப் பெறவேண்டும் என்றும் தொழில் மேம்பாட்டுக் கடனுதவி நிறுவனத்திடமிருந்து கடன் பெறும் வகையில், முதற்கண் செலவு செய்துவிட்டு, அதன் பிறகுதான் தொகையை திரும்பப் பெற இயலும் என்றும் செயலர் தெரிவித்தார். ஆகவே, பேருந்து அடிச்சட்டங்களை வாங்க, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதியுதவி நிறுவனத்திடமிருந்து கடனுதவி பெறப்பட்டது.

2.4. துறை அளித்த பதில் தெரிவிக்கப்பட்டிருந்த கருத்துக்களுக்குப் பொருத்தமாக இல்லை என்பதைக் குறிப்பிட்டு குழு வருந்துகிறது. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதியுதவி நிறுவனத்திடமிருந்து கடனுதவி பெறுமாறு பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு உத்தரவிட்டதில் துறையின் செயல் நியாயமானதாக இல்லை என்பதையும் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதியுதவி நிறுவனத்திற்கு, கடன் தொகையை மிகவும் காலம் தாழ்த்தி அரசு திருப்பிச் செலுத்தியதையும், இதனால் அரசுக்குத் தேவையில்லாத வகையில் ரூ.2.57 கோடி கூடுதல் செலவு ஏற்பட்டதையும் குழு அறிகிறது. பணிமனைகள் கட்டுவது உட்பட, (எஞ்சியுள்ள 3 பணிமனைகள் நிலுவையாகவுள்ளன) திட்ட சாதனையில் ஏற்பட்ட குறைபாடு பற்றி திட்டவட்டமான பதில் ஒன்றைப் பெறவும் குழு விரும்புகிறது. கருதிய நோக்கங்களுக்காக, பல்லவன் போக்குவரத்துக் கழகம் உலக வங்கி நிதியுதவியைப் பயன்படுத்திக் கொண்டதா என்பது குறித்தும், பல்லவன் போக்குவரத்துக் கழகம் இச்செலவை செய்து வருவதை அரசு போதிய அளவு கண்காணித்ததா என்பது குறித்தும் அறிக்கை ஒன்றைப் பெற குழு விரும்புகிறது.

3. பொது

3.1. இவ்வறிக்கையில் அளிக்கப்பட்டுள்ள அனைத்துப் பரிந்துரைகளின் மீது அரசு விரைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். காலக்கெடு குறிப்பிட்டுள்ள நேர்வுகளில் அதனைப் பின்பற்ற வேண்டும். காலக்கெடு குறிப்பிடாத நேர்வுகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த இறுதி அறிக்கை ஒரு மாதத்திற்குள் குழுவிற்கு அளிக்கப்பட வேண்டும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சென்னை-600 009
8 ஆகஸ்டு, 2001,
ஆடி, 24 விசு,
திருவள்ளுவராண்டு-2032.

எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்,
தலைவர்.
பொதுக் கணக்குக் குழு.

இணைப்பு

பரிந்துரைகளின் சுருக்கம்

1. வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் போதிய நிதி ஒதுக்கப் பட்டிருக்கும்போது, துறை முன்னரே நன்கு திட்டமிட்டு, ஆணைகளை முன்னரே வழங்கியிருக்க வேண்டும் என்பதை குழு வருத்தத்துடன் குறிப்பிடுகிறது. வருங்காலத்தில் அத்தகைய குறைகளைக் கண்டிப்பாகத் தவிர்க்கப்படவேண்டுமென குழு விரும்புகிறது. *(பத்தி 1.3)*

2. "4070" "திட்டத்தில் சேராதவை" என்பதன்கீழ் ரூ. *3.75* இலட்சமும், "4070" "திட்டம்" என்பதன்கீழ் ரூ.*3.17* இலட்சமும் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளதாக கணக்கில் காட்டப்பட்டுள்ளதை குழு அறிகிறது. துறை, குழுவிற்குப் பதிலளிப்பதற்கு முன்னர் கணக்குகளை சரிபார்க்கவில்லை என்பதையே இது காட்டுகிறது. இது குறித்து குழு பல உத்திரவுகளைப் பிறப்பித்தும், திரும்பத்திரும்ப பரிந்துரைகளை அளித்திருந்தபோதிலும், கட்டுப்பாட்டு அதிகாரிகள், கணக்கிணக்கப் பணி குறித்து போதிய கவனம் செலுத்தாதது குறித்து குழு தனது அதிருப்தியைத் தெரிவித்துக்கொள்கிறது. மானியக் கோரிக்கை *57*-ன்கீழ் இறுதித் திருத்த மானியத்தை விடவும் மிகைமீதம் ரூ.*15.95* இலட்சம் ஏற்பட்டதற்கு இம்மானியத்தின்கீழ் ஏனைய பெருந்தலைப்புகளில் கணக்கு வைத்துவரும் பிற துறைகளிடமிருந்து பெறப்பட்டவாறான, திட்டவட்டமான காரணங்களைத் துறை அளிக்க வேண்டும் என்று குழு விரும்புகிறது. *(பத்தி 1.5)*

3. துறை அளித்த பதில் தெரிவிக்கப்பட்டிருந்த கருத்துக்களுக்குப் பொருத்தமாக இல்லை என்பதைக் குறிப்பிட்டு குழு வருந்துகிறது. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதியுதவி நிறுவனத்திடமிருந்து கடனுதவி பெறுமாறு பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு உத்தரவிட்டதில் துறையின் செயல் நியாயமானதாக இல்லை என்பதையும் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதியுதவி நிறுவனத்திற்கு, கடன் தொகையை மிகவும் காலம் தாழ்த்தி அரசு திருப்பிச் செலுத்தியதையும், இதனால் அரசுக்குத் தேவையில்லாத வகையில் ரூ.*2.57* கோடி கூடுதல் செலவு ஏற்பட்டதையும் குழு அறிகிறது. பணிமனைகள் கட்டுவது உட்பட, (எஞ்சியுள்ள *3* பணிமனைகள் நிலுவையாகவுள்ளன) திட்ட சாதனையில் ஏற்பட்ட குறைபாடு பற்றிய திட்டவட்டமான பதில் ஒன்றைப் பெறவும் குழு விரும்புகிறது. கருதிய நோக்கங்களுக்காக, பல்லவன் போக்குவரத்துக் கழகம் உலக வங்கி நிதியுதவியைப் பயன்படுத்திக் கொண்டதா என்பது குறித்தும், பல்லவன் போக்குவரத்துக் கழகம் இச்செலவை செய்து வருவதை

அரசு போதிய அளவு கண்காணித்ததா என்பது குறித்தும் அறிக்கை ஒன்றைப் பெற குழு விரும்புகிறது. *(பத்தி 2.4)*

4. இவ்வறிக்கையில் அளிக்கப்பட்டுள்ள அனைத்துப் பரிந்துரைகளின் மீது அரசு விரைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். காலக்கெடு குறிப்பிட்டுள்ள நேர்வுகளில் அதனைப் பின்பற்ற வேண்டும். காலக்கெடு குறிப்பிடாத நேர்வுகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக் குறித்த இறுதி அறிக்கை ஒரு மாதத்திற்குள் குழுவிற்கு அளிக்கப்பட வேண்டும். *(பத்தி 3.1)*





அரசு மைய அச்சகம், சென்னை – 600 079.